//மின்னஞ்சல் மூலம்//

தமிழ்நாடு பள்ளிக் கல்வி இயக்குநரின் செயல்முறைகள், சென்னை–6.

ந.க.எண். 45460 /எம்/இ4/2023, நாள்.10.10.2023

பொருள்: பள்ளிக் கல்வி – கல்வி உதவித் தொகைத் திட்டம் – ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை, பிற்படுத்தப்பட்டோர் நலத்துறையினரால் வழங்கப்பட்டு வரும் கல்வி உதவித் தொகை – தகுதியான மாணவர்களது வருமானச் சான்றிதழ், சாதிச் சான்றிதழ் – விவரங்களை EMIS–இல் பதிவு செய்தல் – அறிவுரைகள் வழங்குதல் – சார்பு.

பார்வை:
1. தமிழ்நாடு பள்ளிக் கல்வி இயக்குநரின் செயல்முறைகள், ந.க.எண்.053862/எம்/இ4/2023, நாள்.19.09.2023.
2. தமிழ்நாடு பள்ளிக் கல்வி இணை இயக்குநரின்(பொ) செயல்முறைகள் ந.க.எண்.028972/எம்/இ4/2023, நாள்.11.07.2023.

------

2023–2024 ஆம் கல்வியாண்டில் பள்ளி மாணவர்களுக்கு Pre–Matric மற்றும் Post–Matric கல்வி உதவித் தொகை பெறுதல் சார்ந்து விரிவான அறிவுரைகள் பார்வையில் கண்டுள்ள செயல்முறைகளின்படி வழங்கப்பட்டன. அதன் தொடர்ச்சியாக மாணவர்களது விவரங்களை EMIS–இல் பதிவு மேற்கொள்ளுதல் குறித்து பின்வரும் அறிவுரைகள் வழங்கப்படுகிறது.

1. 2023–2024 ஆம் கல்வியாண்டில் கல்வி உதவித் தொகை பெற விண்ணப்பிக்க தகுதியான மாணவர்கள் தங்களது சாதிச் சான்றிதழை சமர்ப்பிக்க வேண்டும்.
2. கல்வி உதவித் தொகை பெற பெற்றோரின் ஆண்டு வருமான உச்ச வரம்பு நிர்ணயிக்கப்பட்டுள்ள நேர்வுகளில் வருமானச் சான்றிதழ் சமர்ப்பிப்பது கட்டாயமாகும். மாணவர்கள் முதன்முதலாக விண்ணப்பிக்கும்போது விண்ணப்பிக்கும் ஆண்டிற்குரிய வருமானச் சான்றிதழை ஒருமுறை சமர்ப்பித்தால் மட்டும் போதுமானது.
3. மாணவர்களுக்குரிய கல்வி உதவித் தொகை தொடர்புடைய துறையினால் மாணவர்களது வங்கிக் கணக்கிற்கு நேரடியதாக வரவு வைக்கப்படுவதால், வங்கிக் கணக்கு விவரங்களை சரியாக சமர்ப்பிக்க வேண்டும். மேலும், அந்த வங்கிக் கணக்குடன் மாணவர்களது/பெற்றோர்களது ஆதார் எண் இணைக்கப்பட்டிருக்க வேண்டும்.

4. சாதிச் சான்றிதழ், வருமானச் சான்றிதழ் இந்நாள் வரை பெறாத மாணவர்களின் பெற்றோர்கள் உடனடியாக அருகாமையில் உள்ள அரசு இ-சேவை மையத்திற்கு சென்று விண்ணப்பித்து உரிய சான்றுகளை பெற்று அதன் நகலினை பள்ளியில் ஒப்படைக்க மாணவர்கள் மற்றும் அவர்களது பெற்றோர்களுக்கு தகுந்த அறிவுரைகள் வழங்கிட பள்ளித் தலைமை ஆசிரியர்களை அறிவுறுத்த மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.
5. மேலும், இந்நாள்வரை ஆதார் எண் வங்கிக் கணக்குடன் இணைக்கப்படவில்லையெனில், கணக்குப் பராமரிக்கப்படும் வங்கிக் கிளைக்குச் சென்று உடனடியாக ஆதார் எண்ணை வங்கிக் கணக்குடன் இணைத்திட அறிவுறுத்த வேண்டும். தேவைப்படும் நேர்வுகளில் அஞ்சலக கணக்கினை துவக்கிட, விரைவு நடவடிக்கை மேற்கொள்ள கேட்டுக் கொள்ளப்படுகிறது.

**EMIS பதிவேற்றம் செய்தல்**

1. emis.tnschools.gov.in இணையதளத்தில் பள்ளிக்குரிய உள்நுழைவு விவரங்களை பயன்படுத்தி உள்நுழையவும்.
2. மாணவர் மெனுவில் (Student Menu) மாணவர் பட்டியல் (Student List) –ஐ தெரிவு செய்யவும்.
3. ஒவ்வொரு மாணவருக்கும் எதிரே ஒரு பென்சில் குறியீடு திரையில் தோன்றும். இதனை சொடுக்க ஏற்கனவே EMIS சேமிக்கப்பட்ட மாணவர்களது விவரங்கள் திரையில் தோன்றும். வலது புறத்தில் உள்ள Scholarship என்ற tab –ஐ சொடுக்கி அதில் உள்ள விவரங்களை சரிபார்க்கவும். சாதிச்சான்றிதழ் எண் மற்றும் வருமானச்சான்றிதழ் எண்ணை பதிவு செய்து சமர்ப்பிக்கவும்.

2023–2024 ஆம் கல்வியாண்டில் உரிய காலத்தில் மாணவர்களுக்கு கல்வி உதவித் தொகை பெறும் பொருட்டு தகுதியான மாணவர்கள் அனைவருக்கும் எவரது பெயரும் விடுபடாமல் மாணவர்களது சாதிச் சான்றிதழ் எண், வருமானச் சான்றிதழ் எண் மற்றும் ஆதார் இணைக்கப்பட்ட வங்கிக் கணக்கு விவரங்களை EMIS இணையதளத்தில் பதிவேற்றம் செய்திட உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ள கேட்டுக் கொள்ளப்படுகிறது. இப்பணிகளை 2023 நவம்பர் மாதம் 15 ஆம் தேதிக்குள் நிறைவு செய்திடவும் தொடர்ந்து கண்காணித்திடவும், அனைத்து மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர்களும் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

பள்ளிக் கல்வி இயக்குநர்

10/10/23

பெறுநர்

அனைத்து மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர்கள்.